# தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்கண்ட பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

1. பன்னாட்டுத் தரத்திற்கேற்ப சாலை அமைத்தல்
2. சிறப்பு பராமரிப்புப் பணிகள்
3. நிர்வாக அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கைகள் வகுத்தல்

இத்திட்டம் ரூ. 2160 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதி உதவியுடன் துவங்கப்பட்டது. இதன் தற்போதைய திருத்திய மதிப்பீடு ரூ. 2442 கோடி ஆகும். இதில் உலக வங்கியின் நிதி ரூ. 1903 கோடி மற்றும் தமிழக அரசின் நிதி ரூ. 539 கோடியாகும்.

கடந்த காலங்களில் நிலம் கையகப்படுத்துவதில் தாமதம், இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் இதர காரணங்களால், இத்திட்டத்தின் பணிகள் முன்னேற்றம் குறைவாக இருந்தது. இதனை கருத்தில் கொண்டு, மார்ச் 2009–இல் வருகை தந்த உலக வங்கி குழு முழுமையான ஆய்வுக்கு பின்னர் மார்ச் 2010 வரை கால நீட்டிப்பு வழங்கியது. தற்பொழுது பணித் தளங்களின் நிலைமைக்கு ஏற்றவாறு திட்ட விவர அறிக்கையில் அனுமதிக்கப்பட்ட வேறுபாடுகளின்படி கூடுதல் பணிகள் மற்றும் பணிகளின் அளவுகளின் மாறுபாடு காரணமாக, சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாட்டுக் காலம் 31.03.2012 வரை நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதியுதவியுடன் சாலை மேம்பாடு:**

நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள மாநில, மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் சில சாலைகள், உலக வங்கி நிதி உதவியோடு பணிகள் ஆறு தொகுப்புகளாக மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

- **<u>தொகுப்பு 1</u>** – வேலூர் மாவட்டம் ஆற்காடு முதல் ஆரணி, திருவண்ணாமலை, விருத்தாசலம், ஜெயங்கொண்டம், கும்பகோணம் வழியாக திருவாரூர் வரை ரூ. 768.50 கோடி மதிப்பீட்டில் 378 கி.மீ. நீளமுள்ள சாலை மேம்பாட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் சுமார் 370 கி.மீ. நீளச் சாலைகள் முடிவடைந்துள்ளன. மேலும், 6 இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் மற்றும் ஆரணி, போளூர், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், விருத்தாசலம், அரியலூர், சிதம்பரம், சீர்காழி ஆகிய நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் இதில் அடங்கும். அனைத்து பணிகளும் நடப்பாண்டில் நிறைவடையும்.

- **<u>தொகுப்பு 2</u>** –நாகப்பட்டினம் முதல் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை வழியாக புதுக்கோட்டை மாவட்டம் கட்டுமாவடி வரை ரூ.237 கோடி மதிப்பீட்டில் 119 கி.மீ. நீள சாலை எடுத்துக் கொள்ளப்பட்டதில் 115 கி.மீ. நீளச் சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகிய நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி மற்றும் மூன்று இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்களும் இதில் அடங்கும். இப்பணிகள் நடப்பாண்டில் நிறைவடையும்.

- **<u>தொகுப்பு 3</u>** கட்டுமாவடி முதல் மீமிசல் வழியாக இராமநாதபுரம் வரை ரூ.143 கோடி மதிப்பீட்டில் 100 கி.மீ. நீள சாலை முடிக்கப்பட்டு மத்திய அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களால் 28.02.2009 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

- **<u>தொகுப்பு 4</u>** இராமநாதபுரம் முதல் கீழக்கரை, சாயல்குடி வழியாக தூத்துக்குடி வரை 115 கி.மீ. நீள சாலை ரூ.133 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு இரு பகுதிகளாக 19.11.2009 மற்றும் 27.02.2010 தேதிகளில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

- **<u>தொகுப்பு 5</u>** இராமநாதபுரம் புறவழிச் சாலை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

- **<u>தொகுப்பு 5A</u>** கும்பகோணம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது. சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

- **<u>தொகுப்பு 6</u>** குமரி மாவட்டத்தில், மணக்குடி கிராமங்களை இணைக்கும் உயர்மட்டப் பாலப் பணி 16.03.2010 அன்று துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள புறவழிச் சாலை பணிகளின் நீளம் மற்றும் மதிப்பு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | மாவட்டம் | நகரம் | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | ஆரணி | 5.30 | 11.61 |
| 2. | | போளூர் | 4.90 | 10.72 |
| 3. | | திருவண்ணாமலை | 10.90 | 23.86 |
| 4 | விழுப்புரம் | திருக்கோவிலூர் | 4.40 | 9.63 |
| 5. | கடலூர் | விருத்தாச்சலம் | 9.20 | 19.92 |
| 6. | | சிதம்பரம் | 16.90 | 37.00 |
| 7. | அரியலூர் | அரியலூர் | 7.60 | 16.63 |
| 8. | நாகப்பட்டினம் | சீர்காழி | 8.80 | 19.18 |
| 9. | | நாகப்பட்டினம் | 9.00 | 19.49 |
| 10. | திருவாரூர் | முத்துப்பேட்டை | 4.90 | 10.51 |
| 11. | | திருத்துறைப்பூண்டி | 3.70 | 6.80 |
| 12. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 10.40 | 35.29 |
| 13 | தஞ்சாவூர் | கும்பகோணம் | 4.10 | 24.56 |
| | | **மொத்தம்** | **100.10** | **245.20** |

**உலக வங்கி நிதியுதவியுடன் சாலை பராமரிப்புப் பணிகள்:**

இத்திட்டத்தின் கீழ் சிறப்பு சாலை பராமரிப்புப் பணிகள் மாநில சாலைகள் மற்றும் மாவட்ட சாலைகளில் ரூ.430 கோடி மதிப்பீட்டில் 1033 கி.மீ. நீளத்திற்கு நான்கு கட்டமாக செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 953 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ. 374 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும்.

**நிர்வாக சீரமைப்பு (Institutional Development Strategy)**

நெடுஞ்சாலைத் துறைக்கான இயக்குநர் ஒருவரை நியமிக்கவும், நடைமுறை சார்ந்த நிர்வாக மேம்பாட்டிற்காக நெடுஞ்சாலைத்துறை பணியாளர்களின் எண்ணிக்கையை மறு சீரமைப்பு செய்யவும் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**பொது, தனியார் துறை கூட்டமைப்புத் திட்டம் (Public Private Partnership Scheme):**

பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்பு திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகளுக்காக பன்னாட்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, கோயம்புத்தூர் மேற்கு புறவழிச் சாலை, சென்னை வெளிவட்டச் சாலை ஆகியவற்றின் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் கோயம்புத்தூர் மேற்கு புறவழிச் சாலை பணிகளுக்கான நடவடிக்கைகளை பொது அலகின் மூலமும், சென்னை வெளிவட்டச் சாலைப் பணிகளை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினை (TNRDC) நிர்வாக ஒருங்கிணைப்பாளராக (Managing Associate) கொண்டும் தமிழக அரசு செயல்படுத்துகிறது.

பொதுத் துறை, தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் கீழ்காணும் சாலைகளுக்கு நான்குவழிப் பாதைகள் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க ஆலோசகர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | மெட்டூர் – பழக்கானூத்து–ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–காங்கேயம்–திருப்பூர் சாலை (SH 37) | 126 கி.மீ |
| 2. | ஈரோடு –தாராபுரம் சாலை (SH 83A) | 78 கி.மீ. |
| 3. | ஆற்காடு புறவழிச்சாலை | 3.6 கி.மீ |
| 4. | ஈரோடு வெளி வட்ட சாலை பகுதி II | 9.6 கி.மீ |
| 5. | சென்னை வெளிவட்ட சாலை பகுதி –II | 32.3 கி.மீ |

**சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வு (Strategic Option Study)– II:**

நெடுஞ்சாலைத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வின் அடிப்படையில் தற்போது மேற்கொண்டுள்ள சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கி கடனுதவி அளித்துள்ளது. உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற மேற்கூறிய சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வு இன்றியமையாதது.

தமிழகத்தில் உள்ள அனைத்து சாலை தொகுப்பிலிருந்து தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அடிப்படையில் சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வுப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தகுதி பெற்ற பன்னாட்டு ஆலோசகரை நியமிக்க உலக வங்கி ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்ற பின்பு ஆலோசகரை நியமித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். ஆய்வுகளின் இறுதி அறிக்கையின்படி, உலக வங்கியிடமிருந்தும் மற்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (Performance Based Maintenance Contract):**

சாலை பராமரிப்பில் தற்போது உள்ள முறையை மாற்றி நீண்ட கால பராமரிப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிகளைத் திறம்பட செய்து முடிக்க, தனியார் துறை மூலம் ஒரே ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சாலையை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பராமரிக்க, உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பணிகள் செய்ய கீழ்கண்ட சாலைகள் முன் மாதிரியாக தேர்வு செய்யப்பட்டு உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்பார்வையிட ஆலோசகர் நியமிக்கும் பணியும் முன்னேற்றத்தில் உள்ளது.

| வ. எண் | மாவட்டம் | சாலையின் பெயர் | மொத்த தூரம் கி.மீ |
|---|---|---|---|
| 1. | சேலம் | ஓமலூர் – மேச்சேரி சாலை – ஆனுசு | 14.60 |
| 2. | சேலம் மற்றும் நாமக்கல் | ஓமலூர் – சங்ககிரி –திருச்செங்கோடு –பரமத்தி சாலை ஞுழ –86 | 81.00 |
| 3. | சேலம் மற்றும் ஈரோடு | தொப்பூர்–மேட்டூர் – பவானி–ஈரோடு சாலை (பவானி வரை) ஞுழ – 20 | 94.00 |
| 4. | சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் | சேலம்–அரூர்–திருப்பத்தூர் – வாணியம்பாடி சாலை ஞுழ – 18 | 106.40 |
| | | **மொத்தம்** | **296.00** |

**கணினிமயமாக்குதல்**

துறையின் செயலாக்க அமைப்புகளை வலுப்படுத்தவும் செயல்திறனை அதிகரிக்கவும் பல்வேறு அலகுகளை கணினிமயமாக்க முடிவு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இத்துறையின் பல்வேறு அலகுகளில் தலைமைப் பொறியாளர் அலுவலகம் முதல் பிரிவு அலுவலகம் வரை ரூ.14.77 கோடி செலவில் 751 அலுவலகங்களுக்கு மொத்தம் 1779 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ் 2700 பணியாளர்களுக்கு கணினி சார்ந்த பயிற்சியும், 330 பொறியாளர்களுக்கு மென்பொருள் சார்ந்த மேம்படுத்தப்பட்ட பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

**புவியியல் தொடர்பான தகவல் அமைப்பு – (Geographic Information System)**

சாலை பராமரிப்பில் நெடுஞ்சாலை துறையின் சேவையை பயனுள்ள வகையில் முன்னுரிமை அடிப்படையில் செயலாக்கம் செய்யவும், அதற்கேற்ற அறிக்கையை தயார் செய்யும் விதத்திலும், கணினிகளை கொண்டு புவியியல் தொடர்பான தகவல் அமைப்பு மென்பொருளினை நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு செய்முறைப்படுத்தப்பட உள்ளது. இம்மென்பொருளை கொள்முதல் செய்ய

1. புவியியல் தொடர்பான மென்பொருள் வாங்கப்பட்டு துறையின் தேவைக்கேற்றவாறு அவற்றை வழக்கத்தில் கொண்டு வருவதற்கான பணியினை ஆலோசகர் மூலம் மேற்கொள்ள உலக வங்கியின் அனுமதி பெறப்பட்டுள்ளது.
2. தகவல்களை சேகரிக்கும் உபகரணங்கள் வாங்குவது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளிக்கான அனுமதி உலக வங்கியிடம் எதிர்நோக்கப்படுகிறது

**திட்டம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு (Project & Finance Management System):**

மாநிலம் முழுவதும் கணினிமயமாக்குதலை செயல்படுத்தி தற்பொழுது உடல் உழைப்பு சார்ந்த பணிகளை துரிதப்படுத்தும் வகையில் திட்ட மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் பணியாளர் பதிவேடு அமைத்து அவற்றின் மூலம் பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். இதற்கான ஆலோசகர் நியமனம் இறுதி செய்யப்பட்டு உலக வங்கி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் ஆலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சாலைப் பாதுகாப்பு தணிக்கை**

சாலைப் பாதுகாப்பு தணிக்கை தொடர்பாக உடன்படிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT), சென்னையுடன் 22.01.2010 அன்று செய்யப்பட்டது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு 2, 3 மற்றும் 4–இல் மேம்பாடு செய்யப்பட்ட 335 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் சாலை பாதுகாப்பு மதிப்பீடு செய்தல், சாலைகளின் பாதுகாப்பை ஆய்வு செய்தல், சாலை பாதுகாப்பு குறித்த இன்னல்கள் மற்றும் குறைபாடுகளை கண்டறிந்து அவற்றை களைவதற்கான விரிவான சாலை பாதுகாப்பு அறிக்கை தயார் செய்தல் ஆகிய பணிகள் இதில் அடங்கும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு 2–இல் மேம்பாடு செய்யப்பட்ட நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரை சுமார் 119 கி.மீ. நீளச் சாலையில் பாதுகாப்பு தணிக்கைப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் நடப்பாண்டில் முடியும்.

**சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு.**

சாலை விபத்துகளை தடுக்கும் வண்ணம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பணிகளுக்கான ஆலோசகர்களின் சேவைப் பணிகள், இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவனம், சென்னை அவர்களால் கண்காணிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளில், விரிவான செயல்முறை திட்டம் வகுத்தல், மூன்று மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டுநர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சாலைகளில் நிற்கும் வாகனங்களின் பின்புறம் மோதுவதை தவிர்க்கும் முறைகளைக் கண்டறிதல் ஆகிய ஐந்து பணிகளும் இதில் அடங்கும். இப்பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.